**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 2 (LW 2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முத்துப்பாண்டி | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2025.

(1-வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 B.N.S.S மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரியால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை-

1.நான் தற்பொழுது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, தேக்கம் பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.11.2013-ம் ஆண்டு அல்லி நகரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்பொழுது சுமார் காலை 10.15 மணி அளவில் தேனி, சரக மருந்து ஆய்வாளர் அழைத்ததின் பேரில் தேனி காந்திஜி ரோடு முகவரியல் இயங்கி வந்த வைஷ்ணவி மருந்து கடையில் ஆய்வுக்காக அழைக்கப்பட்டேன்.

2. நான் என்னுடைய உதவியாளருடன் சென்றேன். மருந்து உற்பத்திக்கு தடை செய்யப்பட்ட கம்பெனியால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் சம்மந்தமாக ஆய்வு செய்வதற்கு சாட்சியாக அழைக்கப்பட்டோம். அங்கு அந்த கடையின் உரிமையாளர் ஈஸ்வரன் என்பவர் இருந்தார். அவர் இன்று ஆஜரில் இல்லை. அவரை நேரில் பார்த்தால் எனக்கு தெரியும். அங்கு என் முன்னால் சந்தேகத்திற்குரிய மருந்துகள் கைப்பற்றப்பட்டது. ஏழு வகையான ஆங்கில

மருந்துகள் கைப்பற்றப்பட்டன. அதற்கு நான்கு சாட்சியாக கையெழுத்து செய்தோம்.

3. மீண்டும் தேனி எடமால் தெருவில் உள்ள திருமலை மருந்து கடைக்கு அழைத்து சென்று அதே போன்று மருத்துவ அதிகாரி ஆய்வு செய்து சில மருந்துகளை எங்கள் முன்பாக கைப்பற்றினார். அப்பொழுது மதியம் 01.00 மணி இருக்கும். அதற்கும் நாங்கள் சாட்சியாக இருந்தோம். என்னை மருந்து அதிகாரி அது சம்மந்ததாக விவரித்து சொன்னார்.

## எ.த.கு.வி

| | |
|---|---|
| கேள்வி | நீங்கள் கையெழுத்து செய்த ஆவணத்தில் இரண்டு தனிப்பட்ட சாட்சிகள் முன்பு கையெழுத்து செய்ததாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் ? |
| பதில் | சரிதான். நான் மருந்துகள் துறை சார்ந்த அலுவலர் இல்லை. |
| கேள்வி | நீங்கள் அரசு ஊழியர் என்பதால் உங்களுடைய பணிகள் மற்றும் பொறுப்புகள் பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்களுடைய மேல் அதிகாரி யார்? |
| பதில் | வட்டாட்சியர். |
| கேள்வி | உங்கள் பணி சம்மந்தமாக வெளியே செல்லும் போது அதற்கான பதிவேடுகள் மற்றும் உயர் அதிகாரியிடம் தகவல் சொல்ல வேண்டும் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இந்த வழக்கு சம்மந்தாக சென்ற பொழுது உங்கள் மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | முதலில் ஒரு கடைக்கு செல்லும் போது மணி எத்தனை ? |
| பதில் | 10.45. |
| கேள்வி | எவ்வளவு நேரம் அங்கு இருந்தீர்கள் ? |
| பதில் | சுமார் 45 நிமிடங்கள். |
| கேள்வி | நீங்கள் போவதற்கு முன்பே படிவங்கள் அனைத்தும் தயார் நிலையில் இருந்தது என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | வட்டாட்சியர் உங்களுக்கு சம்பவ இடம் செல்ல அனுமதி வழங்கியதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா? |
| பதில் | இல்லை. |

| | |
|---|---|
| கேள்வி | நீங்கள் கையெழுத்து செய்ததாக சொல்லும் ஆவணங்கள் உங்களுடைய பணிக்கான அரசு முத்திரை இடப்பட்டுள்ளதா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் உடன் சென்ற மருந்து ஆய்வாளர் பற்றி உங்களுக்கு எத்தனை வருடமாக தெரியும்? |
| பதில் | சம்பவத்திற்கு முன் தெரியாது. |
| கேள்வி | நீங்கள் சென்ற கடைகளுக்கு அருகில் மக்கள், வீடுகள், கடைகள் அதிகமாக இருக்கும் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஏற்கனவே தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து செய்தீர்கள் என்றாலும், நீங்கள் சொன்ன மாதிரி எந்த கடைக்கு செல்லவில்லை என்றாலும், நீங்கள் அரசு அலுவலர் என்பதால் அரசுக்காக சாதகமாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | தவறாக உற்பத்தி செய்வதற்கு தடை செய்யப்பட்ட, மருந்து நிறுவனம் பற்றிய உத்தரவு எதுவும் உங்களிடம் காண்பிக்கப்பட்டதா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் சொன்னதாக சொல்லும் சங்கதிகள் மற்றும் ஆவணங்கள் எதையும் சரியால் பரிசீலனை செய்யாமல், படித்து பார்க்காமல், இயந்திர தனமாக செயல்பட்டுள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | உங்கள் சாட்சியம் பொய்யான சாட்சியம் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.02.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.02.12 17:46:47 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
12.02.2025.